பாரதமணி

ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்.

மாலை 4 | ஞாயிறு 19-5-40 விக்ரம௵ வைகாசி௴ 6௳ | முத்து 7

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
உலக வர்த்தமானம்		170
அதிகப்பிரஸங்கம்		172
உதிர்ந்த மணிகள்		174
நாம் பறித்த புஷ்பங்கள்		175
இத்தாலியின் வெற்றி		177
ஸுபாஷிதம்	ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ.	179
சுதேசித் தொழில்	"கௌரி"	180
உடைந்த சிலை	"கார்த்திகை"	181
கனகபுரியின் மர்மம்	வி. ஸத்யவதி	184
சிறுவர் பகுதி	"மலர்"	187
ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் (2)	கா. சி. வேங்கடரமணி	190
புத்தக விமர்சனம்		191

"பாரதமணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல,

உலக வர்த்தமானம்

சென்ற வாரத்தில் ஐரோப்பிய அரசியல் சரித்திரத்தில் முக்கியத்வம் வகிக்கக் கூடிய சில சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆக்கிரமிப்புக்காரர்களின் படை யெழுச்சி ஒரு பக்கம். நேச தேசத்தினர் தீவிர யுத்த முஸ்தீப்புகள் மற்றொரு பக்கம்.

நார்வேயில் பிரிட்டிஷ்-பிரெஞ்சு படை சரிவர அனுப்பப்படாததனால் தான் சில அசம்பாவிதங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன வென்று பிரிட்டிஷ் பிரதம மந்திரியை குறை கூறிய பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் அவசரம் அவசரமாக, பிரிட்டிஷ் யுத்த முஸ்தீப்புகளை பலப்படுத்த சில மாறுதல்களைச் செய்ய வேண்டினார்கள். "சேம்பர்லின் சென்ற வாரத்தில் காமன்ஸ் சபையில் பேசிய பேச்சு திருப்திகரமானதாக இல்லை. நார்வேயில் எதிரியின் முன்னேற்றத்திற்கு காரணம் என்ன வென்று கேட்டதற்கு சேம்பர்லின் அளித்த பதில் வெறும் பேச்சாகத்தான் இருந்தது. அதில் அவர் ஒன்றும் விவரமாகக் கூறவில்லை" என்று முக்கியமாக பல அங்கத்தினர்களும் அபிப்பிராயப்பட்டார்கள். லாயிட்ஜ் ஜியார்ஜும் எதிர்க் கட்சித் தலைவர் ஆட்லியும் சேம்பர்லின் சர்க்காரை விளாசு விளாசு என்று விளாசினார்கள். கடைசியில் இந்தப் பிரதம மந்திரியின் மேல் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்றறிய தீர்மானம் ஒன்று காமன்ஸில் கொண்டுவரப்பட்டது. தீர்மானம் உசிதமான மெஜாரிட்டியில் "நம்பிக்கையுண்டு" என்று நிறை வேறினும், சேம்பர்லின், தன் குறைகளை யறிந்து, "ஓர் கலப்பு மந்திரி சபை" ஒன்று கூட்டி யுத்தத்தை வெற்றிகரமாக நடத்த, பதவியிலிருந்து விலகிக்கொண்டார். சேம்பர்லினுக்குப் பிறகு காமன்ஸ் சபையின் பூரண செல்வாக்கையும் பெற்றிருந்த சர்ச்சில் பிரதம மந்திரி பதவியை ஒத்துக்கொண்டார். சர்ச்சில் தன் மந்திரி சபையில் எதிர்க் கட்சியினருக்கும் இடம் அளித்து "சிறந்தது" என்று மதிக்கத் தகுந்த ஓர் மந்திரி சபையை அமைத்தார். சேம்பர்லினும் புதிய மந்திரி சபையில் ஸ்தானம் வகிக்கிறார். லார்டு ஸெட்லண்டுக்குப் பதிலாக எல். எஸ். அமெரி என்பவர் இந்தியா மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

புதிய மந்திரி சபையின் அமைப்பைப் பற்றியும் அனுபவசாலியான சர்ச்சிலின் தலைமை பற்றியும் பத்திரிகைகள் எல்லாம் ஒருமிக்க திருப்தியடைந் திருக்கின்றன. சர்ச்சிலின் தலைமையில் இந்த மந்திரி சபை யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தும் என்று ராஜதந்திரிகள் நம்புகிறார்கள்.

சென்ற மஹா யுத்தத்தில் ஸாமர்த்தியத்துடன் பிரதம மந்திரி ஸ்தானத்தை வகித்து யுத்தத்தை நடத்திய லாயிட் ஜார்ஜு புதிய மந்திரி சபையைப் பாராட்டிப் பேசினார். "சர்ச்சில் ஓர் சிறந்த அறிவாளி. யுத்த நுணுக்கங்களை நன்கறிந்தவர். அவருக்கு உலகம் முழுவதிலும் உள்ள சுதந்திரப் பிரியர்கள் ஆசி கூறுவார்கள்" என்று புகழ்ந்து பேசினார்.

வின்ஸ்டன் சர்ச்சில் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டு முதன் முதலாக காமன்ஸ் சபையில் பேசினார். "நமது ரத்தம், கண்ணீர், உழைப்பு, வேர்வை இவற்றால் யுத்தத்தை திறமையாக நடத்துவதே நமது கொள்கை. நமது ஒரே லக்ஷியம் யுத்தத்தில் வெற்றி பெறுவதே" என்று கூறினார்.

பிரெஞ்சு மந்திரி சபையும் மாறி யிருப்பதாகச் செய்தி கூறுகிறது.

நேச தேசத்தினர் எதிர்ப்புக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கும் பொழுதே ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய பள்ள நாடுகளுக்கு ஆபத்து வந்துவிட்டது. ஜெர்மனி திடீரென்று அவற்றின் மேல் பாய்ந்து விட்டது. கடைசியாக வந்த செய்திகள் ஹாலந்து சர்க்கார் எதிர்ப்பை நிறுத்தி எதிரியிடம் சரணடைந்தது என்று கூறுகின்றன. பிரான்ஸிலும் சில நகரங்கள் ஜெர்மன் விமானங்களால் மிக்க சேதமடைந்தனவாம். ஹாலந்து மகாராணி தன் தேசத்தைவிட்டு லண்டனுக்கு வந்து விட்டாள் என்று செய்தி கூறுகிறது. ஹாலந்து சர்க்கார் லண்டனிலிருந்தே வேலை செய்யும் என்று லண்டனிலிருந்து ஹாலந்து ராணி பிரகடனம் வெளியிட்டிருக்கிறார். பெல்ஜியம் மிகுந்த சிரமத்துடன் எதிர்த்துக் கொண்டிருக்கிறது என்று தெரிகிறது.

இத்தாலியில் நேச நாடுகளுக்கு விரோதமான பிரசாரங்கள் நடந்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்தியாவில்

ஜெர்மனியின் திடீரென்று திரும்பிய போக்கைக் கண்டு அரசியல் வாதிகள் எல்லோரும் மனக்கலக்கமடைந் திருக்கிறார்கள். ஜெர்மனியின் அநியாயமான போக்கைக் கண்டித்து ஆங்காங்கு தலைவர்கள் பேசுகிறார்கள். பாபு ராஜேந்திரபிரஸாத் ஜெர்மனியின் படை எடுப்பைக்கண்டித்து ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் "நேசநாடுகள் வெற்றிபெற வேண்டுமென்பதே நமது கோரிக்கை. ஜெர்மனியின் அநீதிப் போக்கை நிறுத்த நேச நாடுகளுக்கு நாம் ஆதரவு அளிக்கவேண்டும்" என்று கூறினர்.

ஜவஹர்லால் நேரு தற்கால அரசியல் நிலைமையைப்பற்றிப் பேசும் பொழுது "ஐரோப்பாவில் நிகழும் திடுக்கிடும் சம்பவங்களைக்கண்டு நாம் மனத்தளர்ச்சி யடையக் கூடாது. நம்முடைய லக்ஷியத்திற்கே நாம் தீவிரமாகப் பாடுபடவேண்டும்" என்று கூறினர்.

தற்காலம் இந்தியாவில் இருந்துவரும் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க எந்தவிதமான கௌரவமான ஏற்பாட்டுக்கும் ஒத்துக்கொள்ள தான் தயாராக இருப்பதாகக் காந்திஜி கூறுகிறார். ஆனால் இந்தியாவுக்கு வேண்டிய அரசியல் திட்டத்தை இந்தியர்களே சிருஷ்டிக்கவேண்டும் என்பது அவர் கருத்து. பாதுகாப்பு, வியாபார உரிமை, முதலிய அம்சங்களைப்பற்றி பிரிட்டிஷார்களுடன் ஓர் ஏற்பாட்டில் ஒப்பந்தம் செய்துக் கொள்ளலாம் என்று கூறுகிறார்.

எல். எஸ். அமெரி புதிய இந்தியா மந்திரியாக நியமிக்கப்பட்டது பற்றி இந்தியாவில் திருப்தி ஏற்பட்டிருக்கிறது. அவர் சமீப காலத்தில் "இந்தியா சுதந்திரம் அடையத்தக்க நிலைமையை அடைந்துவிட்டது" என்று கூறியது இந்தியாவிடம் அவருக்குள்ள பற்றுதலைக் காட்டுகிறது என்றும், அப்பேற்பட்டவர் இந்தியா மந்திரிபதவியை ஏற்றுக்கொண்டது இந்தியா - பிரிட்டன் வருங்கால சம்பந்தத்தைச் சீர்படுத்தும் என்றும் பலர் அபிப்ராயப் படுகிறார்கள்.

ANNOUNCEMENT

Friends and readers of **The Bharatamani** are requested to note the change of our Office address from 7, North Mada Street, Mylapore, to **295, Lingha Chetti Street, G. T. Madras.** All correspondence and remittances are in future to be sent to the new address.

MANAGER

அதிகப் பிரஸங்கம்

ஸனாதனிகளும் டாக்கிகளும்

மதுரையில் ஸனாதனிகளின் ஸம்மேளனம் ஒன்று நடந்தது. அதில் நிறைவேறிய தீர்மானங்களில் ஒன்று பின்வருமாறு :—"பிலிம் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள், புராணக் கதைகளையும், சம்பவங்களையும் சின்னபின்னப் படுத்தி, உருமாற்றி, பொய்யானவைகளை ஸ்ருஷ்டித்து, ஹிந்துக்களின் மனதைப் புண்படுத்தும் வழக்கத்தைத் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு அரசாங்கத்தார் வேண்டிக்கொள்ளப் படுகிறார்கள்." படமுதலாளிகள், விநியோகஸ்தர்கள், கொட்டகைக் காரர்கள் முதலியவர்கள், இது சம்பந்தமான விஷயங்களில் மததலைவர்களின் முன் உத்திரவு பெற வேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டது ('ஹிந்து' 5-5-40)

ஹிந்து என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவரும் அவசியம் கவனித்துத் திருத்தவேண்டிய முக்கிய விஷயங்களில் இது ஒன்று. "இந்தியாவைத் தூஷித்து அந்நிய நாட்டார் எடுக்கும் படங்களைத் தணிக்கை செய்யக்கூடாது. அவைகளைப் பகிஷ்காரம் செய்யவேண்டும். அம்மாதிரிப் படங்கள் எடுப்பதை நம் அரசாங்கம் ஆக்ஷேபித்துத் தடை செய்யவேண்டும், என்று கூக்குரலிடுபவர்கள், இந்தியாவில் இந்தியர்களே தம் தெய்வங்களையும் மதத்தையும் தூஷித்துக் கேலி செய்து எடுக்கும் படங்களைச் சிறிதும் ஆக்ஷேபிக்காமலிருப்பதன் காரணம் என்ன?

இந்தியாவைத் தவிர வேறு எத்தேசமும், ஹிந்துக்களைத் தவிர வேறு எத்தேசத்தவரும், தம் தெய்வங்களை அவதூறு செய்யச் சிறிதும் இடங்கொடுக்கமாட்டார்கள். ஏசுநாதரையோ, அல்லாவையோ இவ்விதம் செய்ய, கிறிஸ்துவர்கள் அல்லது முகம்மதியர்கள் இடங்கொடுப்பார்களா? சில வருஷங்களுக்கு முன் ஏசுநாதரைப்பற்றி, சென்னை பத்திரிகை ஒன்று, ஆக்ஷேபனைக்கு இடமற்ற சில விஷயங்களை எழுத, அதை ஆக்ஷேபித்துப் பாதிரிமார்களும் சில கிறிஸ்துவர்களும் செய்த அட்டகாஸம் யாவருக்கும் தெரிந்த விஷயம். இதுபோலவே அல்லாவைப்பற்றி எழுதிய ஆரிய ஸமாஜியின் கதி உலகறிந்த விஷயம். மற்ற மதத்தினர், தம் கடவுளைப்பற்றி இவ்வளவு அக்கரையுடனிருக்க, ஹிந்துக்கள் மாத்திரம் இவ்வளவு அசிரத்தையாக இருப்பானேன்? அவதூறுகளைத் தடுப்பதற்குப் பதிலாக ஹிந்துக்களே அவதூறு செய்வது, ஹிந்து மதத்தையேஅழிப்பதுபோல் ஆகும்.

உலகத்திலேயே நாகரீகம் முற்றிய, மிகவும் முற்போக்கான தேசம் "ஐக்ய அமெரிக்கா" தான். அத்தேசத்தில் சில நாட்களுக்கு முன் நடந்த சம்பவம் ஒன்று கவனிக்கத்தகுந்தது. பெர்ட்ராண்ட் ரஸ்ஸல், (Bertrand Russell) என்பவர் பிரசித்தி பெற்ற கணித நிபுணர், பெரிய வேதாந்தி, ஆசார சீர்திருத்தக் காரர். அவர் கொள்கைகளும் புஸ்தகங்களும் உலகப் பிரசித்தி பெற்றவை. பல சர்வ கலாசாலைகளில் ஆசிரியராக இருந்து வருகிறார். "நியூ யார்க்" கவர்ன்மெண்டு கலாசாலையில் அவரை வேதாந்த (Philosophy) ஆசிரியராக வலுவிலழைத்து கவர்ன்மெண்டார் நியமித்தார்கள். ஆனால் அதை ஆக்ஷேபித்து ஒரு அம்மை வியாஜ்ஜியம் தொடுத்தார். "ஸ்திரீ புருஷ பிரச்னையில், துராசாரமாயும் விபரீதமாயும் உள்ள கொள்கைகள் கொண்டவர் ஸ்ரீ ரஸ்ஸல். ஆகையால் அவர் இப்பதவிக்குத் தகுந்தவர் இல்லை. இப்பதவிக்கு அவரை நியமித்ததால் அமெரிக்க யுவர்களும் யுவதிகளும் நடத்தை கெட்டு விடுவார்கள்" என்று அந்த அம்மையின் சார்பில் வாதிக்கப்பட்டது. நீதிபதியும் இவ்வாதத்தை ஏற்றுக்கொண்டு "அவர் நியமனம் ஜனங்களுக்கே ஓர் அவமானம். 'ஆபாஸ ஆசிரியர்' பதவி ஏற்படுத்துவது

போல் ஆகும்" என்று கூறி நியமனத்தை ரத்துசெய்து விட்டார். இத்தீர்ப்பு, நியாயமா இல்லையா என்பது ஆலோசிக்க வேண்டிய விஷயமில்லை. ஏன் இவ்விதம் தீர்ப்பளிக்கப்பட்டது என்பதுதான் நாம் கவனிக்கவேண்டிய விஷயம்.

தன் வாழ்நாட்களுக்குள், ஏசுநாதராக ஒரு படத்தில் நடிக்க வேண்டு மென்பது "சார்லி சாப்ளின்" என்ற பிரபல நடிகரின் ஆசை. ஆனால் அதற்குப் பொது ஜனங்கள் சம்மதித்து இடங்கொடுக்கமாட்டார்கள் என்ற பயத்தினால், இதுவரை ஏசுநாதராக நடிக்க அவருக்குத் தைரியம் வரவில்லை. இதுவரை ஒரு ஆங்கிலப்படத்திலாவது ஏசுநாதரின் முகத்தைக் காட்டவில்லை. ஏசுநாதரின் தெய்வீகமான தோற்றத்துக்கு ஈடாக, ஒரு மனிதனுக்கும் தோற்றம் கிடையாது. ஆகையால் ஒரு மனிதனை கிறிஸ்து நாதர்போல் காட்டுவது தெய்வ அவமரியாதை என்றே இதுவரை அவர் முகம் படங்களில் காட்டப்படவில்லை.

ஆனால் இந்தியாவிலோ, முக்கியமாகத் தமிழ் நாட்டிலோ, பட முதலாளிகள் செய்யும் அக்ரமம் ஸகிக்க முடியாதது. கோரமான விகார ரூபங்களை நமது தெய்வங்களெனக் காட்டுகிறார்கள். கட்டை குட்டையாய், பானை வயிற்றுடன் இருக்கும் மனிதன் ஆஜானுபாஹுவான ராமராக விளங்குகிறான். நரைதிரையுடன் தோன்றும் குடிகாரத் தோற்றமுள்ளவன் கிருஷ்ணராக அவதரிக்கிறான். சப்பை மூக்கும் நீண்ட பற்களுமுள்ள பெண்மணிகள், சீதை, ருக்மிணி, பாமை முதலியவர்களாகத் தோன்றி "நெற்குதிர்களை"த் தோற்கடித்துவிடுகிறார்கள். இவர்கள் பேசுவதோ இதைவிட மோசம். சென்னை ரிக்ஷாக்காரர்கள், தங்கள் மனைவி மக்களுடன் குடித்துவிட்டுப் பேசுவது, இவர்கள் பேச்சைவிட உயர்ந்ததாக இருக்கும். ஹாஸ்யமெல்லாம் கடவுளிடம்தான். இதில் சந்தேகம் ஏதேனும் இருந்தால் "விஷ்ணு லீலா, கிருஷ்ணன் தூது, தக்ஷயக்ஞம், பாமா விஜயம்" முதலிய படங்களைப் பார்த்தால், சந்தேகம் தெளிந்து விடும்.

ஆசார சீர் திருத்தம், மதஸம்பந்தமான விஷயங்கள் கொண்ட படங்களும் புராணப் படங்களைவிட இன்னும் மோசம். தற்சமயம் சமூகத்திலுள்ள பிளவுகளையும் வகுப்பு வாதங்களையும் தங்களுக்கு அனுகூலமாக உபயோகித்து, வசனங்களை இதற்கு அனுகூலமாக இருக்கும்படி எழுதிப் பணம் பறிப்பதிலேயே பட முதலாளிகள் கவனமாக இருக்கிறார்கள். வகுப்புவாதத்தையும் துவேஷத்தையும் கிளப்பிப் பாமர ஜனங்களை ஏமாற்றுவதா பட முதலாளியின் தொழில்? 1000 அல்லது 2000 வருஷங்களுக்கு முன் நடந்த கதைகளில், கி. பி. 1939, 40 ஆம் வருஷங்களுக்குத் தகுந்த வசனங்களையா எழுதுவது? இவ்விதம் எழுத ஆதாரம் ஏதேனும் உண்டா? இம்மாதிரி பட முதலாளிகளிடம், பிராமணர்கள், பிராமண விதவைகள், மடாதிபதிகள் முதலியவர்கள் அகப்பட்டுக்கொண்டு படும்பாடு சொல்லத்தரமல்ல. "மள்ளி பெள்ளி, பக்தசேதா, மாலபில்லா, ஸேவாஸதனம், சந்திரகாந்தா" முதலியவைகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

பிராமண டைரக்டர்களுக்குப் பிராமண பழக்க வழக்கங்கள்தான் நன்றாகத் தெரியும். மற்ற வகுப்புக்களின் பழக்கவழக்கங்கள் அதிகமாகத் தெரியாது. ஆகையால் பிராமணர்களைக் கதா பாத்திரங்களாக வைத்துக்கொண்டு "பிராமணர்-பிராமணர் அல்லாதார்" என்ற பிளவைத் தங்களுக்கு அனுகூலமாக உபயோகித்துக் கதை எழுதி, இம்மாதிரி படங்கள் எடுத்து விடுகிறார்கள். பிராமணர்கள் அவதூறு செய்யும் படங்களில் அநேகம் பிராமணர்களால் தான் எடுக்கப்பட்டவை.

சமூகப் படங்களென்று, ஒரே வகுப்பை அடிக்கடி தாக்கி அவ்வகுப்பின் மேல் உள்ள துவேஷத்தை அதிகப்படுத்துவது பட முதலாளிகளின் பெருங் குற்றம். எல்லா வகுப்புகளிலும் உள்ள குற்றங் குறைகளை எடுத்துக்காட்டி, எவ்விதமான வகுப்புப்பேதத்தையும் காட்டாமல், எடுக்கப்படும் படம்தான் சரியான சமூகப்

(அடுத்த பக்கம் பார்க்க)

உதிர்ந்த மணிகள்

ஒரு தனிப்பட்ட நபரை எடுத்துக் கொண்டால் சேம்பர்லின்மீது குற்றஞ் சொல்லக் காரணங்கள் கிடையாது. ஆனல் சாமர்த்தியத்துடனும் முன் ஜாக்கிரதையுடனும் யுத்தத்தை நடத்த வேண்டியது அவர் கடமை. அதைத்தான் பிரிட்டன் கோருகிறது. நேச தேசத்தவர்களின் யுத்த நோக்கம் பூர்த்தி யடைய அதுதான் அவசியமாகிவிடுகிறது.

கார்வின்

* * *

இந்தியர்கள் ஜன நாயகம் வெற்றி யடையவேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். ஆனல் ஜனநாயக வல்லரசுகள், ஜெர்மனி, ரஷ்யா, ஜப்பான் அல்லது இத்தாலி ஆகிய இவைகளோடு யுத்தம் செய்து வெற்றியடைந்தால் மாத்திரம் போதாது. தங்களிடத்திலுள்ள, அந்நிய தேசங்களை அடக்கி ஆளவேண்டும் என்கிற துர்க் குணத்தையும் ஜெயிக்கவேண்டும்.

ஸ்ரீ. எஸ். ஸத்தியமூர்த்தி

* * *

விமானக் குடைகள் மூலமாக ஹிட்லர் துருப்புகள் இறக்குவதை மிகவும் கீழ்த்தரமான நடத்தை என்று பலர் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனல் கீழ்ப் பிரதேசங்களை (Low countries) அனுசரித்து வேலைசெய்யும்போது கீழ்த்தரமான நடத்தைதான் கையாளப்படவேண்டும். ரோமில் இருக்கும்போது ரோமானியர்போல்தானே நடந்துகொள்ளவேண்டும்.

போத்தன் ஜோஸப்

இங்கிலாந்தும் பிரான்சும் ஜன நாயகத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற கொள்கையுடன் இருந்தால், இங்கிலாந்து அக் கொள்கையை எப்படி இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் அமுலுக்குக் கொண்டு வரப் போகிறது என்று இந்தியா தெரிந்துகொள்ளவேண்டும்.

புருஷோத்தமதாஸ் தாண்டன்

லார்ட் ஸெட்லண்டு உத்யோகத்தை விட்டுப் போனதுபற்றி எனக்குச் சந்தோஷம். அவர் போவதற்கு இதுதான் தகுந்த சமயம். அவர் இந்த வேலைக்குத் தகாதவராக இருந்தார். எல். எஸ். அமெரி கன்ஸர்வேடிவ் கட்சியினராக இருந்தாலும் அவர் அரசியலில் ஓர் உண்மை திருஷ்டியுள்ளவர். உண்மை திருஷ்டியுள்ளவர்களுடன் பழகுவதில் எனக்குத் திருப்திதான்.

எஸ். ஸத்யமூர்த்தி.

(முன் பக்கத் தொடர்ச்சி)

படம் என்பதைப் பட முதலாளிகள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, படம் பிடித்து நம் தாய் நாட்டிற்குத் தொண்டு புரிவார்களாக.

இவ்விஷயத்தில் ஸனதனிகள் ஸரியான வழியைக் காட்டியிருக்கிறார்கள். இதை அரசாங்கத்தார் உடனே கவனித்துச் சரியான சட்டதிட்டங்கள் ஏற்படுத்த வேண்டும். "தணிக்கை சபையும்", மத விஷயமான படங்கள், தெய்வ சம்பந்தமான படங்கள், புராணப் படங்கள் முதலிய படங்களில், சிறிதும் ஆக்ஷேபகரமான இடங்கள் இருக்காதபடி கவனித்துத் தணிக்கை செய்ய வேண்டும். இவ்விதம் அரசாங்கமும், தணிக்கை சபையும், கவனம் எடுத்துக்கொள்ளும் வரை, இடைவிடாது பிரசாரமும் கிளர்ச்சியும் செய்ய வேண்டியது ஹிந்துக்களின் முக்கிய கடமை.

"அதிகப்பிரஸங்கி"

நாம் பறித்த புஷ்பங்கள்

ஸி. ஆர். ரெட்டி

அரசியலில், டாக்டர் ஸி. ஆர். ரெட்டியின் சிறந்த குணங்கள் கண்டுபிடிக்கப்பட்டனவாயினும் அவற்றுக்குத் தகுந்த பரிசை அவர் பெறவில்லை. அவர் பொது வாழ்வில் உயர்ந்த பதவியை வகிக்கத் தகுந்த யோக்கியதாம்சங்கள் உள்ளவர். மிதமிஞ்சி படித்தவர். தெளிவான மூளை. எழுத்திலும், பேச்சிலும், தன் யோசனைகளை சுலபமாக வெளியிடும் சக்தியுள்ளவர். சொல்வாதத்தில் மிகவும் சக்தி வாய்ந்தவர். சிறந்த குணாதிசயங்களையுடைய சட்டசபை வாதி. ஆங்கிலப் படிப்பு படித்து முடிந்ததும் அவருடைய யௌவன வயதாரம்பத்திலேயே அவர் புகழ் புஷ்பம் மலர்ந்து நறுமணம் கமழ்ந்தது. தன் யோக்கியதையைக் காட்டிக்கொள்ள ஒருவிதமான பரீக்ஷையுமில்லாமலே மேன்மைக்கு வந்தவர் இவர். அவர் இந்த நிலையை அடைந்த புதிதில் அவர் பெயருக்கே ஓர் வசீகரத்தன்மை இருந்தது. அவர் எல்லோருடைய மனத்திலும் ஓர் நம்பிக்கையை உண்டு பண்ணினார். ஜனங்கள் தயக்கமின்றி அவர் வருங்காலத்தில் பிரபலத்வம் அடையக் கூடியவர் என்று நிச்சயம் செய்துகொண்டார்கள்.

பள்ளிக்கூடங்களிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் இவ்வளவு கீர்த்தியுடன் வெளிவந்த இந்த வரன் பெற்ற இளைஞனுக்கு பிற்காலம் என்ன கொணர்ந்து கொடுத்தது? இளமையில் அவர் கண்ட நீர் உண்ட மேகம்போலிருந்த எதிர் காலம் கடைசியில் நீர்த்துளிகள் உதிர்க்கவில்லை. அவர் யோக்கிதைக்குத் தகுந்த பரிசு கிடைக்கவில்லை. ஏமாற்றம் அடைந்தார். அவர் யோக்யதைக்கு, மிகவும் சிறியதான ஓர் பதவியை—ஆந்திர சர்வகலாசாலை உதவி அத்தியக்ஷகர் பதவி—வகித்து ஆர்வத்துடன் இப்பொழுது வேலை செய்து வருகிறார். இது தான் வருத்தத்தைக் கொடுக்கத் தகுந்ததாக இருக்கிறது. வால்டேரின் ஆரோக்கியத்தைக் கொடுக்கும் சீதோஷ்ண ஸ்திதி அவரை வசீகரிக்கவில்லை. ஏனெனில் ஆந்திர சர்வ கலாசாலை பெஜவாடாவில் இருக்கும் பொழுதே அவ்வூர் கோடை உஷ்ணத்தையும் பொருத்துக்கொண்டு அவர் வேலை பார்த்துவந்தார்.

மைசூர் சமஸ்தானத்தில் அவர் வகித்த கல்வி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவியே அவர் வயதுக்குள் வகித்த உன்னத பதவி. கோபத்துடன் அப்பதவியை ராஜீநாமா செய்தார். இவர் ராஜீநாமாவை ஒத்துக்கொள்ளாமலிருக்கலாம்; ஆனால் அதிகாரி சுறுக்கென்று ராஜீநாமாவை ஒத்துக் கொண்டார்... அரசியலில் அவர் நிலைமை வருந்தத்தக்கது; பலர் சந்தேகிக்கும்படியான பல தத்துவங்களை வெளியிடுபவர். அரசியல் உலகத்தில் அவருக்கு இருக்கும் செல்வாக்கு பூஜ்யம். அவர் எதிர்காலத்தைப் பற்றிக் கூறுவதையும், இது நல்லது இது கெட்டது என்று விளக்கிக் காட்டுவதையும் சிலரே உயர்ந்ததென்று மதிப்பிட்டு எடுத்துக் கொள்ளுகிறார்கள். உன்னத ஸ்தானத்தில், ஸாரமின்றி பின்பற்றுபவர்களின்றி, அவர் விடப்பட்டிருக்கிறார். அவர் மந்திரி சபை உயரத்துக்கு ஏற ஹேதுவே இல்லை என்றுதான் தோன்றுகிறது.

ஸ்ரீ எஸ். ஸத்தியமூர்த்தி

நம் காலத்து அரசியலில் ஓர் தீவிரமான போராட்டத்தின்—சுய நம்பிக்கையுள்ள ஓர் ஏழை தலைமைப் பதவியையும் பெருமையையும் அடைய செய்யும் போர்—சின்னம் ஸ்ரீ ஸத்தியமூர்த்தி, காந்தீயம் கடுமையான விரக்தியுடன் பொது ஜன சேவை செய்வதைக் கொள்கையாக உடையது. தன்னலம் கருதாத மனப்பான்மையாலும், ஆடம்பரமற்ற வாழ்க்கையாலும், வருமானத்தைத் துறந்து விடுவதாலும், நூல் நூற்பதாலும், ஆசிரமங்கள் ஆரம்பிப்பதாலும், ஜெயிலுக்குப் போவதாலும் சிலர் அரசியலில் மிகுந்த பிரபலமடைந்து விட்டார்கள். இதில் சிலவற்றை ஸத்தியமூர்த்தியும் கையாண்டுப் பார்த்தார். அவரும் காந்தியத்தின் அரசியல் கொள்கைகளால் ஆகர்ஷிக்கப் பட்டார். ஆனால் அவர் மனம் மிக்க சிரமத்தைத் தக் கொடுக்கும் காந்தீயக் கொள்கைகளில் அதிகமாகச் செல்லவில்லை. அவர் வெகு சாதுர்யமுள்ளவர். சொற்பொழிவாற்றுவதிலும் சொல் வாதம் புரிவதிலும் அவருக்குமிக்கப் பிரியம். பெரிய விவாதங்களில் ஈடுபடுவதில் அவருக்கு ரொம்ப சந்தோஷம். வாதத்தில் வெற்றி பெருவதில் அவருக்கு பிரம்மானந்தம். ரோஜாப்பூமாலை

களாலும், ஜனக் கூட்டத்தின் கரகோஷங்களாலும் மிக்க ஆனந்தமடைபவர். அவர் எதிரில் கற்பூரம் எரிவதில் அவருக்கு மிகுந்த திருப்தி. சிறந்த யோக்கியதாம் சங்களையுடைய சட்டசபை வாதி அவர்.

சட்டசபையில் இடைவெளிக் கேள்வி நேரங்களில் அவர் மெய்மறந்து தன் சாமர்த்தியங்களைக் காண்பிப்பவர்.

பணத்தைச் செலவழித்து ஸுகத்தை அனுபவிப்பதில் அதிகப் பிரியமுள்ளவர். ஓர் செல்வவந்தர் குடும்பத்தில் பிறந்திருப்பாரானால் அவர் வெகு சுலபமாக வாழ்வில் உன்னத பதவியையும் திருப்தியையும் அடைந்திருப்பார். தன் ஜீவனத்திற்கு சம்பாதிக்க வேண்டுமென்பதே அவருக்குத் தடங்கலாக விருந்தது. ஒருவர் தன் அரசியல் வாழ்க்கையின் பரிசை அடைவதற்கு வெகு நாட்கள் ஆகின்றன. அதுவுமல்லாமல் அதை இச்சிப்பவர்கள் அப்பரிசையுடைய, தங்களுக்கென்றே ஏராளமான ஆஸ்தி யுடையவர்களாக இருக்க வேண்டும். அதோடு அவர் பெயரைக் கெடுக்க எவரும் அவரைத் தூஷிக்காமல் இருக்கவேண்டும்.........அரசியலில் அவரைப் பலபேர்கள் இகழ்ச்சி செய்தும், அவ்வளவையும் பொருட்படுத்தாமல் அவர் தண்ணீர் நிலைக்குமேல் தலையை நிமிர்த்திக்கொண்டு நீஞ்சல் அடிக்கிறார்...........அவர் செய்த தியாகங்களுக்குத் தகுந்த பரிசு இன்னும் அவர் பெறவில்லை. பல விலையுயர்ந்த பரிசுகள் அவருக்குக் கிடைக்கவேண்டியவை கிடைக்காமல் போய் விட்டன. அவருக்கு தலைமைப் பதவியும், அதிகாரமும் வருகிற சமயத்தில் திடீரென வேறொருவர் அவற்றை அபகரித்துக்கொள்ளுகிறார். பல தடவைகள் ஏமாற்றமடைந்திருக்கிறார். ஆனால் இவ்வேமாற்றங்கள் அவர் காங்கிரஸினிடத்தில் கொண்ட பக்தியைக் குறைக்கவில்லை. அவர் காங்கிரஸில் சேர்ந்தநாள் முதல் பக்தியுடன் காங்கிரஸ் கொள்கைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் சிறிதும் பங்க மேற்படாமல் நடந்துவருகிறார்.................சில குறைகள் காணப்பட்டாலும் ஸ்ரீ ஸத்தியமூர்த்தி தமிழ் நாட்டினருக்குத் தேசீய உணர்ச்சி யூட்டி அவர்களைப் படிப்பித்து காங்கிரஸில் பற்றுள்ளவர்களாகச் செய்த மூவர்களுள் இவர் ஒருவர். அவர் புத்தி சாதுர்யம் புகழத் தக்கது...........பிரதிபலன் மிகக்குறைவா யிருப்பதையும் கவனிக்காமல், மறைவில் தூஷிக்கும் பலரின் பல்லுக்கும் ஜடியாமல் பொதுஜன சேவை மிகுந்த வளவு செய்திருக்கிறார்.

—ஆன்வார்டில் சித்திரலேகா

அறிக்கை.

பாரதமணியின் அமைப்பைப்பற்றியும் அதில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளைப்பற்றியும் வாசகர்களிடமிருந்து அனுப்பப்படும் அபிப்பிராயங்களையும் யோசனைகளையும் வரவேற்கிறோம்.

வாசகர்கள் அவரவர்கள் வசிக்கும் பிரதேசங்களில் அரசியல், பொருளாதார சமூக சீர்திருத்தவிஷயங்களைப் பற்றிக் கூறும் யோசனைகளை ஆசிரியருக்கு எழுதும் கடித மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம்.

அக்கடிதங்கள் பிரசுரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஆசிரியர்

இத்தாலியின் வெற்றி

"இன்றைய உலகப்போக்கைப் பார்த்தால் இத்தாலி தான் அதிக லாபம் பெறுவதாகத் தெரிகிறது" என்று 'கரெண்ட் ஹிஸ்டரி' யில், எச். வி. உல்ஃப் எழுதியிருக்கிறார். இது எப்படி?

இத்தாலிய-ஜெர்மனி அச்சு, இரு நாடுகளின் தனித்தனி நன்மைகளைப் பாதுகாக்கும் முறையில் தான் அமைந்துள்ளது. இவை இடையே நேசப்பான்மை யொன்றும் அதிகம் இல்லை. வெகு காலமாக ஆஸ்திரிய, ஜெர்மன் படைகள் இத்தாலியை அடக்கி வந்தன. சமீபகாலத்திலும் 'பிரென்னர் பாதை'யை ஜெர்மன் துருப்புகள் பிடித்ததில், இத்தாலிய மக்களுக்கு இஷ்டமில்லைதான். இருந்தாலும், இரு நாடுகளும் சேர்ந்திருப்பதில் வெகுவான லாபமிருப்பதை அறிந்தே இவ்வுறவு கொண்டாடுகின்றனர்.

பொதுவுடைமை, ரஷ்ய எதிர்ப்புப் பிரசாரமெல்லாமும் பேச்சளவில்தான். தவிர, ஜன நாயக நாடுகளிடமிருந்து சிறிது ஆதரவும் பெறுவதற்காகத்தான். அபிஸீனியாவை சூறையாடிய போதும் ஸ்பெயினில் தலையிட்ட போதும், ரஷ்யாவும் இத்தாலியும் எதிர்த்து நின்ற போதிலும், இரு நாடுகளுக்குமிடையே வியாபார சம்பந்தம் அறுபடவில்லை. அதோடு ரஷ்யாவுக்கு வேண்டியதெல்லாம் மேற்கு ஆசிய நாடுகளாகிய பெர்ஷியா, ஆப்கானிஸ்தானம் இவைகள் தானென்று இத்தாலியர் கருதுகின்றனர். ஆனல் பால்கன் பிரதேசங்களில் ரஷ்யா கையை வைத்தால் இத்தாலி சும்மா இராதாம்.

பால்கன் பிரதேசத்தில் இத்தாலிக்கு ஒரு கண்ணுண்டு. இங்கு ஜெர்மனியோ, ரஷ்யாவோ தலையிடா வண்ணம் இது செய்து வருகிறது. துருக்கியுடன் சமீபகாலத்தில் நல்லுறவும் ஏற்பட்டுள்ளது. 'ஸ்மர்ணு' வை எங்கு இத்தாலி ஆக்ரமித்துவிடுமோ வென்று துருக்கிக்குப் பயமிருந்துவந்தது. அதேபோல் 'டாடெகனீஸ்' தீவுகளைத் துருக்கி பிடிக்க முயற்சிக்குமென்று இத்தாலி எண்ணியது. இதெல்லாம் இப்பொழுது கொஞ்சம் சரேடைந்திருக்கிறதெனலாம்.

மத்தியதரைக்கடலை 'இத்தாலிய ஏரி' யென்றும், அங்கு தங்களது ஆதிக்கம் வளர வேண்டு மென்றும் இத்தாலி கூறிவந்துள்ளது தெரிந்ததே. இக்கடலோரமான பிரஞ்சு 'மொராகோ', 'டியுனீஷயா' இவைகளில் என்றும் இத்தாலியின் நோட்டமிருந்து வருகிறது. இவ்வகைகளெல்லாம் தீர வேண்டின் பிரான்ஸ், இங்கிலாந்து இவைகளை எதிர்க்க நேரிடும்.

மேற் கூறப்பட்டவைகளை மனத் திற்கொண்டே இத்தாலியின் போக்கைக் கவனிக்க வேண்டும். இத்தாலியின் இஷ்ட சித்திக்கான முயற்சியில் அது இறங்கினல் வரும் லாப நஷ்டங்களைக் கவனிப்போம். இத்தாலியின் ஸப்மரைன், ஏரோபிளேன் படைகள் மிக்க பலமுடையதென்று சொல்லப்படுகிறது. ஆனல் இவை எவ்வளவு தூரம் பயன்படு மென்பது காரியத்தில்தான் தெரிய வேண்டும். இதற்கெதிராக, பிரான்ஸிலிருந்தும், எகிப்திலிருந்தும், இங்கிலாந்தின் கடற்படையிடமிருந்தும் எதிர்பார்க்கக் கூடிய படையெடுப்பு சாமானியமாயிராது. ஆனல் 'ஸ்பெயினில்' வெகு பாடுபட்டு அமைக்கப்பட்டுள்ள நேச அரசாங்கத்திடமிருந்து உதவி கிடைக்குமென்றும், ஜிப்ரால்டர் பாடு தகராறு தானென்றும் சொல்லலாம். இருந்தாலும், சமீப யுத்தத்தில் பெரு நஷ்டமடைந்துள்ள ஸ்பெயின் எவ்வளவு தூரம் உதவியாயிருக்கு மென்று கூற முடியாதல்லவா?

இதையெல்லாம் உத்தேசித்துத்தான் இத்தாலி இதுவரை தன் வாலையாட்டவில்லையெனலாம். இத்தாலியின் நிலை 'நடு நிலைமை' யல்லவாம். "சண்டையில் கைகலக்காமை" (non-belligerency) தானும். இத்தகைய நிலைமையில்தான் தனக்கு லாபமிருப்பதை இத்தாலி நன்குணர்ந்துள்ளது. யுத்தம் வலுத்து ஏதேனுமொரு பக்கம் தோற்றாலும், யுத்தத்திலீடுபட்ட இரு கைகளும் நஷ்டமடைவது தான் தற்கால யுத்த நியதியாயுள்ளது. இந்நிலையில், முடிவாக சமாதானப் பேச்சு நடக்குமிடத்தில், யுத்தத்தினல் சீர்குலையாத இத்தாலிக்கு நல்ல மதிப்பிருக்குமல்லவா? அதோடு எந்தப் பக்கம் வெற்றி யடைந்தாலும், இத்தாலியும் சிறிது பங்கு பெறலாம்.

யுத்த ஆரம்பத்தில் பிரஞ்சு சர்க்கார் இத்தாலிக்கு எம். லவாலைத் தூது அனுப்பினராம். லவால் அபிஸீனிய விஷயத்திலிருந்து முஸோலினியை அறிந்தவர். இவரிடையே

நடந்த பேச்சுக்களின் பயனாக, ஒருவித (தற்காலிகமான) சமரஸம் ஏற்பட்டுள்ளது போலும். அதிலிருந்து பிரஞ்சுப் பத்திரிகைகளெல்லாம் இத்தாலியின் விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாய் நடந்து வருவதைக் காணலாம். இங்கிலாந்தும் இத்தாலி விஷயத்தில் சிறிது கவனமாகவே இருந்து வருகிறது. கப்பல் வர்த்தகத்தில், அமெரிக்கக் கப்பல்களை விட இத்தாலியக் கப்பல்கள் அதிக தாமதமின்றி எளிதில் பரிசோதிக்கப்பட்டு, வழியனுப்பப்படுகின்றனவாம். இப்படியாக, மொத்தத்தில் இத்தாலி இதுவரையில் சாமர்த்தியமாகவே தன் நலங்களைக் காத்து வருகிறது.

இவ்வகையிலேயே செல்லுமானால் முடிவில் அது அதிக லாபம் பெறலாமென்றே தோன்றுகிறது. வீணாக யுத்தத்தில் கலந்து—வெற்றியோ, தோல்வியோ—பலம் குறைந்து, உள்நாட்டுக் கலவரங்களுக்கு ஆளாகிச் சீர்குலைவதைவிட, இன்றைய போக்கில் நடந்து வந்தால் லாப முண்டென்று முஸோலினி யறிவார். ஆனாலும் ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. சென்றவார நிகழ்ச்சிகளை, நம் பத்திரிகைகளிலிருந்து அறிவதிலிருந்து, எக்காரணத்தைக் கொண்டோ, இத்தாலி தன் பழைய முறையிலிருந்து வழுவி வருவதாகத் தெரிகிறது. இது எங்கேபோய் முடியுமென்பதைக் காலப் போக்கிலிருந்துதான் தெளிய முடியும்.



அறிக்கை.

பாரதமணிக்கு விஷய தானம் செய்பவர்கள் கவனிக்கவேண்டிய சில முக்கிய விஷயங்கள் :—

(1) கதைகளோ கட்டுரைகளோ பாரதமணி பக்கங்களில் மூன்றுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

(2) காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) கதைகள், கட்டுரைகள் எழுதுவோரின் முழுவிலாஸமும், அவர்கள் வயதும் குறிக்கப்பட் டிருக்கவேண்டும்.

(4) வேண்டிய தபால் பில்லை அனுப்பினாலொழிய, பிரசுரத்துக்கு அங்கீகரிக்கப் படாத கதைகள் கட்டுரைகள், திருப்பி அனுப்பப்படமாட்டா.

ஆசிரியர்.

ஸுபாஷிதம்

[ய. மஹாலிங்க சாஸ்திரி, அண்ணாமலைநகர்]

ராத்ரிர் கமிஷ்யதி பவிஷ்யதி சுப்ரபாதம்
பாஸ்வானுதேஷ்யதி ஹஸிஷ்யதி பங்கஜஶ்ரீ: |
இத்தம் விசிந்தயதி கோசகதே த்விரேபே
ஹா ஹந்த ஹந்த நளினீம் கஜ உஜ்ஜ ஹார ||

"இரவு கழியப் போகின்றது. விடியற் காலை வரப்போகின்றது. சூரியன் உதிக்கப் போகிறான். தாமரைப்பூ காந்தியுடன் விளங்கப் போகின்றது" இவ்வாறு தாமரைப்பூவின் கோசத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்த வண்டானது நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது, ஆ! கஷ்டம்! கஷ்டம்! தாமரையை யானையானது அடியோடு பிடுங்கி எறிந்தது.

இந்த சுலோகமானது சூரியோதய சமயத்தை வருணிக்கின்றது. மிகவும் அர்த்த புஷ்டியுள்ளது. சுலோகத்தைப் படித்த பிறகு நம்மனதில் பின்வரும் அபிப்ராயம் தோன்றும் :—ஒரு நாள் அந்திப் பொழுதில் ஒரு தேன் வண்டானது ஒவ்வொரு புஷ்பத்திலுமுள்ள தேனைப் பருகிக் கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் சந்திரன் உதயமானான். இதே சமயத்தில் மேற் குறிப்பிட்ட வண்டானது மிகுந்த தளங்களோடு கூடின ஒரு தாமரைப் புஷ்பத்தின் கோசத்தினுட்புகுந்து மது பானம் செய்ய ஆரம்பித்தது. சந்திரோதயமானவுடன் தாமரைப் புஷ்பத்தின் கோசமானது மூடிக்கொண்டது. வண்டானது தாமரைப் பூவினுள் அகப்பட்டுக் கொண்டது. இதற்கு மேல் நடந்த சம்பவமே சுலோகத்தில் வருணிக்கப்பட்டிருக்கிறது.

சிறைப்பட்டிருந்த வண்டு விடியற் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் சூரியோதயமானவுடன் தாமரை மலர்ந்ததும் முன் போல் யதேச்சையாகத் திரியலாமென்று வண்டானது எண்ணமிட்டுக்கொண் டிருக்கும்பொழுது விதியின் செயலால் ஒரு யானையானது அந்தத் தாமரையோடையில் பிரவேசித்து வண்டு அடைப்பட்டிருந்த தாமரையை அடியோடு பிடுங்கி எறிந்து விட்டது. ஆவலோடிருந்த வண்டின் கதியை நாம் ஊகிக்கலாம்.

இயற்கையில் நடந்த ஓர் சம்பவத்தைக் கவி எவ்வளவு சாமார்த்தியத்துடன் வார்த்தைகளால் சித்திரித்திருக்கிறாரென்று இந்த சுலோகத்தின் ரசத்தையறிந்தவர்களுக்கே நன்கு விளங்கும்.



சுதேசித் தொழில்

"கௌரி"

இக்காலத்தில் கைவேலை என்பது எங்கும் பிரசித்தி பெற்று வருகிறது. கைவேலை என்பதில் பல வகைகள் இருக்கின்றன. ஓலை, மற்றும் பிரம்பு இவைகளைக் கொண்டு கூடைகள், தட்டுகள் முதலியவைகள் செய்யப்படுகின்றன. இது ஒரு பக்கமிருக்க, 'எம்பிராய்டரி' என்பதும், பின் கலர் நூல்களை வைத்துக் கொண்டு துணியில் செய்வதும் இப்பொழுது எங்கும் இருக்கிறது. பொதுவாக இவ் வேலையை, சில ஸ்திரீகள் வீடு வீடாய் போய், பெண்மணிகளுக்கு, வீண் வெட்டி வம்பு பேசவிடாமல், அந்நேரத்தில், இவ் வேலைகளைக் கற்பிக்கிறார்கள். ஆதலால் தான் இதற்கு சுதேசித் தொழில் என்று பெயர்.

'எம்பிராய்டரி' என்னும் வகுப்பில் பல பிரிவுகள் இருக்கின்றன.—ரிப்பன் வேலை குறுக்குத் தையல் முதலியவைகள். இக்காலத்தில் யாவருக்கும் இதில் ஒரு அலாதி மோகம் ஏற்பட்டிருக்கிறது. அதுவுமல்லாமல் எல்லா கலாசாலைகளிலும் இத்தொழிலை கற்பித்து வருகிறார்கள்.

நிற்க, "எம்பிராய்டரி" என்னும் வகுப்பில் பல வகைகளையும் கற்பித்து, பின் பள்ளிக்கூடங்களில் வகுப்புகளில் "கை வேலை" என்பதை ஒரு தனி பாகமாக வைக்கிறார்கள். இந்த படிப்பு பிற்காலத்தில் உபயோகப்படக் கூடியது. இது என்ன வென்றால், கைத்தொழில் எந்த விதத்திலும் ஒருவருக்கு உபயோகமாய் இருக்கும் இதை முக்கியமாக எடுத்துக் கொண்டு படித்து, ஒருவர் வாத்தியாராகப் போனால் அந்த வித்தையை மற்ற மாணவர்களுக்குக் கற்பிக்கலாம்; அதுவுமல்லாமல் கல்யாணம் செய்து கொண்டு வீட்டில் இருப்பதாய் இருந்தாலும், இத்தொழிலைக் கொண்டு வீட்டை அலங்கரிக்கலாம்.

இப்பொழுது இந்தியா முழுவதிலும் கை வேலை, கை நெசவு என்பன எங்கும் பிரசித்தி பெற்று வருகின்றன. எங்கும் ஹரிஜன சேவாப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அங்கும் கைவேலை, கைநெசவு வகைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இப்பள்ளிக் கூடங்களில் ஏழைகளுக்கும், கதியற்ற குழந்தைகளுக்கும் இவ் வித்தையைக் கற்பித்து, பின் வேலையும் செய்து வைக்கிறார்கள்.

இதைக் கற்றுக் கொண்டால், யாவருக்கும் எந்த விதத்திலும் எந்த நிலமையிலும் பிழைப்பு ஏற்படும். வீட்டில் தாயார் தன்னுடைய குழந்தைகளுக்கு இவ் வித்தையைக் கற்பிக்கலாம். அதுவுமல்லாமல் சௌகரிய முள்ளவர்கள் இவ்வித்தையை இலவசமாகக் குழந்தைகளுக்குக் கற்பிக்கலாம். சில கலாசாலைகளில், இதற்கென்றே பெண்மணிகளுக்கு இவ் வித்தையை ஸ்பெஷலாகக் கற்பித்து, கவர்மெண்டில் வேலைசெய்ய அனுப்புகிறார்கள். உதாரணமாக, மதராஸ் சேவாசதனம், சாரதா ஹோம் முதலியன குறிப்பிடத் தக்கவை.

ஆதலால் இவ்வித்தையைப் படித்தவர்களுக்கு இக் காலத்தில் நல்ல உபயோகமும், பிரயோசனமும், நல்ல எதிர்காலமும் இருக்கின்றன. இப்பொழுது இவ்வித்தையைப் படிப்பது நாகரீகமாகவும் இருக்கிறது.

உடைந்த சிலை

"கார்த்திகை"

பத்து வருடங்களுக்குமுன் நடந்தது; இன்று நடந்ததுபோல் கண்முன் நிற்கிறது. அப்பொழுது நான் படித்துவிட்டு வேலைக்காக அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தேன். பட்டணத்து வெயிலெல்லாம் என்மீதுதான் காய்ந்தது; ஏன், மழை, காற்று, முதலியவைகூட. என்னிடம் என்பாட்டிக்கு அத்தியந்தப் பிரீதி. அவள் தன்னந்தனியாக ஒரு கிராமத்தில் ஒண்டிக் குடித்தனம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் என் விலாசத்திற்கு கடிதம் வந்தது. எனக்கு யார் எழுதப்போகிறார்கள்? என் பாட்டிதான் எழுதியிருந்தாள். அதில் "அடுத்த வாரம் செவ்வாய்க்கிழமையன்று. கிராமத்தில் புதுசாய்க் கட்டியிருக்கும், முத்தாரம்மன் கோவில் பிரதிஷ்டை, உடனே புறப்பட்டு வா" என்றிருந்தது. கடிதத்தை அப்பாவிடம் காட்டினேன். அவர் "அடேயப்பா! பெரிய பிரதிஷ்டை! அவசியம் போகணும்" என்று அலக்ஷியமாகக் கூறிப்போய் விட்டார். பின் அம்மாவிடம் விஷயத்தை மெள்ளத் தெரியப்படுத்தினேன். எனக்கு பட்டணத்தைவிட்டு எந்தக் காட்டிலோ உள்ள பட்டிக்காட்டிற்குப்போகப் பிரியமா, என்ன? வீட்டில் பிடுங்கல் சகிக்கமுடியவில்லை. ஆகவே எப்படியும் போய்விடுவதென்று முடிவுசெய்தேன். அதற்குத் தகுந்தாற்போல் அம்மாவும், "ஆமடா, பாட்டி கண்ணை மூடுவதற்குள் உன்னைப் பார்க்க வேண்டாமா? நீயும் இங்கே சும்மாதானேயிருக்கே! போயிட்டு வாயேன்" என்றாள்.

கலியுக வரத நல்லூர். ரொம்ப நீளமான பெயர்; அழகான பெயருங்கூட. ரயில்வே ஸ்டேஷனுக்கும், ஊருக்கும் ஒன்றரை மைல் (வண்டிக்காரன் கூறியபடி). பாதையின் இரு மருங்கிலும் உள்ள தென்னை மரங்களில் இளநீர் குலை குலையாய்க் காய்த்துத் தொங்கின. பாதையைவிட்டுச் சற்று சறுக்கினாலும் வயலில் விழ வேண்டியதுதான். இயற்கை யன்னையின் பூரணப் பொலிவையும் நான் கண்டேன். இதுவரை பட்டணத்து 'தார்' ரோட்டில் குறுக்கும் நெடுக்குமா அலைந்த எனக்கு இவை அமிர்தம் போன்றிருந்தன.

நான் கிராமத்திற்குப் போன மறுநாள் செவ்வாயன்றுதான் அம்மன் கோவில் பிரதிஷ்டை. காலையிலிருந்தே சகல ஏற்பாடுகளும் துரிதமாய் நடந்தன. ஊர் மணியக்காரர் பொய்சொல்லா மெய்யப்பிள்ளைதான் தர்மகர்த்தா. அவரே கோயில் முன் நின்றுகொண்டு எல்லா வேலைகளையும் கவனித்தார். கோயில்முன்பு ஒரு தட்டுப்பந்தல் போட்டிருந்தது; தென்னங்கீற்றுப்பந்தல். அதன் நான்கு பக்கங்களிலும் மாவிலை தொங்கியது. ஒவ்வொரு மூலையிலும் இளநீர் குலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

சிறுவர்களுக்குத்தான் எனன உற்சாகம்? கபடமற்ற அவர்கள் முகத்தில் தவழ்ந்த புன்னகைக்கு ஈடு ஈரேழுலகிலும் உண்டா? தங்கள் வீட்டுக் கல்யாணத்தில்கூட அவ்விதம் சந்தோஷமா யிருந்திருக்க மாட்டார்கள். "அடே, ஒரு கொச்சம் கயிறு வேணும்" என்று மணியக்காரர் வாய் திறக்க வேண்டியதுதான், பதினைந்து கொச்சம் வந்து விடும்.

* * *

கலியுக வரதநல்லூரில் சிற்ப வேலை செய்யும் குடும்பம் ஒன்றுதான் உண்டு. முன் காலத்தில் மிகச் சிறப்புடன் விளங்கிய குடும்பம் அது. பெரிய பெரிய ராஜாக்களும், பணக்காரர்களும் இந்த ஊருக்கு வந்து போனார்கள் என்றால், அதன் காரணம் இதைத் தவிர வேறு இருக்க முடியாது. அந்தப் புராதன வம்சத்தின் மானத்தை ஓரளவு காப்பாற்றவே கார்மேகம் பிறந்திருக்கிறான் என்றால் மிகையாகாது! கார்மேகத்திற்கு வயது இரு

பத்தி மூன்றுதான். கலியாணமாகி ஆறு மாதம் கூடச்சரியாக ஆகவில்லை. அப்பொழுதுதான் மணியக்காரர் பொய்சொல்லா மெய்யப்ப பிள்ளை அவனைக் கூப்பிட்டனுப்பினர். அவன் வந்து நின்றான்.

“அப்பா கார்மேகம்! நம்ம ஊர் அம்மன் கோவில் புதுசா கட்டி முடியப் போகுதில்லே! அங்கே பிரதிஷ்டை பண்ண அம்மனின் சிலையை நல்லாச் செய்து அடுத்த மாதம் கடைசிச் செவ்வாய்க்கு கொடுத்துவிட வேண்டும். தெரியுதா? உன் பாட்டன், முப்பாட்டன் பேரைக் காப்பாத்தற வழியிலே யிருக்கணும். இன்றையிலிருந்து விரதம் அனுஷ்டித்து பயபக்தியுடன் வேலையை ஆரம்பி. பணத்தைப்பற்றி யோசிக்காதே!” என்று கூறினர்.

கார்மேகத்திற்கு ஒன்றுமேபுரியவில்லை. அவனுக்கு மணியக்காரர் சொன்னது என்னமோ போலிருந்தது. அவன் இது வரை சிற்பத் தொழிலில் ‘அ’ கூட கற்கவில்லை. அதற்குள் அம்மன் சிலையா?...... அவன் பதில் சொல்லாமல் கல்லாய் சமைந்து நின்றான்.

“என்ன கார்மேகம், மௌனம்?” என்ற சப்தம் கேட்டுத் தலை நிமிர்ந்தான்.

“சரி, எஜமான்கள் உத்திரவு. அம்பிகையின் அருளால் சிலை செய்கிறேன்” என்று சொல்லிவிட்டு, கார்மேகம் நேராக பூஜாரியிடம் சென்று விபூதி பெற்றுக் கொண்டு வீடு சேர்ந்தான். முகவாய்க் கட்டையில் கையை வைத்துக்கொண்டு யோசிக்கலாயினன். அவன் சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைப்பவள்போல் அவன் மனைவி வந்தாள்.

கலியாணத்திற்கு முன்பெல்லாம் அவன் ஊதாரியாய்த் திரிந்தான். ஊரில் ஒரு இடம் பாக்கியில்லாமல் உட்கார்ந்து கொண்டு அரட்டை யடிப்பான். ‘காலில் விலங்கு போட்டது’ முதல் பெட்டிப் பாம்பாய்விட்டான். மேலும் அவன் மனைவி நல்ல அழகி; இளமையின் பொலிவு அவள் முகத்தில் விளங்கியது. அவள்மேல் கார் மேகம் உயிரை வைத்திருந்தான் என்று கூடச் சொல்லலாம். காரணம் அவள் அழகி என்பதற்காக மட்டுமல்ல; அவளிடத்தில் அவன் ஓர் தெய்வீகத்தைக் கண்டான். அவளை அவன் சதா பார்த்துக்கொண்டிருப்பான். அதில் அத்தியந்தப் பிரேமை. மூன்றாம் பிறைச் சந்திரனையொத்த புருவங்கள் அவன் கண்களுக்கு நித்தியவிருந்தளித்தன. ஆம், அவ்வழகிய கண்கள் கக்கிக்கொண்டிருந்த நெருப்பு ஜ்வாலையில் அவன் மூழ்கிக் கொண்டிருக்க விரும்பினன். சில சமயங்களில் அவனுக்கே சந்தேகம் தோன்றிவிடும்.—இவள் யார்? எனக்கு எப்படிக் கிடைத்தாள்?—அவன் மனதில் அவள் ஓர் அழியாத ஓவியமாக சமைந்துவிட்டாள். அதை அவனால் அகற்ற முடியவில்லை. இல்லை பிரம்மா நினைத்தாலும் முடியாது.

கார்மேகம் அம்மன் சிலைசெய்ய ஆரம்பித்து, கடைசிச் செவ்வாயும் நெருங்கிக் கொண்டுவந்தது. கல்லில்,அவன் கைபோன போக்கெல்லாம், உருவம் உருவாகிக் கொண்டிருந்தது.

பிரதிஷ்டைக்கு முந்திய நாள் காலை. இளங்கதிரவன், அன்று மேகத்தினால் கவியப்பட்டிருந்தான் — கார் மேகத்தின் மனதில் துன்பம் கவிந்ததுபோல. அம்மன் சிலை முடிந்த மாதிரிதான். அவன் மனைவி அப்பொழுதுதான் அந்த அறைக்குள்—சிலை செய்வதற்கென்று ஆசாரமாக விடப்பட்ட அறை—வந்து மணியக்காரர் வந்திருப்பதாய்த் தெரிவித்தாள். கார்மேகம் வெளியே வந்து பார்த்தான். மணியக்காரப் பிள்ளையும், கிராம முனிசீபு முதலியாரும் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள்.

“என்னப்பா, சிலை முடிவாகிவிட்டதா?” என்று மணியக்காரர் கேட்டார்.

“ஆமாம், எஜமான்.”

“இப்பொழுது பார்க்கலாமல்லவா? எங்கே யிருக்கு?”

கார்மேகம் முன்செல்ல இருவரும் அறையினுள் பிரவேசித்தனர். “இதோ” என்று கார்மேகம் சுட்டிக் காட்டினன். என்ன ஆச்சர்யம்! மணியக்காரர் இரண்

படி பின்வாங்கி நின்றார். கிராம முனிசிபு "என்ன இது" என்று அலறியவண்ணம் வாசலைநோக்கி விரைவாக நடந்தார்.

"அட, பாவி, என்ன நீசத்தனம்டா? சீ, அயோக்கியப் பயலே! உனக்கு அடுக்குமாடா?" என்று தலைகால் தெரியாமல் மணியக்காரர் குதித்தார். என்ன அதிசயம்? ஆம்; அது அம்மன் சிலையா? இல்லை. சந்தேகமே வேண்டாம். அது மனித ரூபமாகவல்லவோ தெரிகிறது. கொஞ்சமும் சந்தேகமில்லை. கார்மேகத்தின் கண்மணி கல்யாணிதான்! அவளையா இவன் சிலையில் நிர்மாணித்தான்?

கார்மேகத்தின் கண்கள் திறந்தன. அவனையறியாமலேயே அவன் கை செய்த வேலையைக் கண்டான். கண்டும் என்ன? அவன் மனைவியின் இளமைக்கு அது சின்னம் என்று எண்ணினான். அவன் பதில் சொல்லாமல் திக்பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டிருந்தான். அந்தோ! அடுத்த கணம், மணியக்காரர் சிலையை எட்டி உதைத்தார். "ஐயோ, என்னை வேண்டுமானால் கொன்று விடுங்கள். சிலையை மாத்திரம் ஒன்றும் செய்துவிடாதீர்கள்" என்று அலறி குறுக்கே விழுந்தான் கார்மேகம். ஆனால் சிலை பூமியில் உருண்டு ஓடியது. சிலை இரண்டு துண்டாகியது. "ஹா! இதோ நானும் வந்து விடுகிறேன். நீ போய் நானிருப்பதா" என்று கூவிக்கொண்டு சிலைமீது விழுந்து புரண்டான்.

"சுத்தப் பைத்தியம்" என்று கூறிவிட்டு மணியக்காரரும், கிராம முனிசிபும் வெளியே சென்றனர்.

அன்றிரவு கார்மேகத்திற்கு ஜுரம் 105 டிகிரி. காடை மேடை என்று பிதற்றிக் கொண்டிருந்தான். அவன் இளமனைவி அவன் பக்கத்திலிருந்து சிச்ருஷை செய்தாள். "பாவி என் சிலையை உடைத்து விட்டானே, கல்யாணி" என்ற புலம்பல் நிற்கவில்லை.

மறுநாள் காலையில் கார்மேகம் வீட்டு முன்பு சிறிது கூட்டமாயிருந்தது. தென்னை ஓலையும், வைக்கோல் கட்டும் கார்மேகத்தின் தெய்வலோக யாத்திரைக்குச் செய்யப்பட்ட புஷ்ப விமானம் போன்று காட்சியளித்தன. இவ்வளவு சிறந்த சிற்பி பூவுலகிலிருக்கத்தகுதியில்லை என்று ஈச்வரன் தன் சன்னிதிக்கு அழைத்துக் கொண்டான் போலும்! அவன் மனைவியின் அழுகைக்குரல் அப்பொழுது நாவிதன் ஊதிய சங்கொலியுடன் கலந்து ஒலித்தது. ஒவ்வொருவர் காதிலும் கார்மேகத்தின் சோகக்கதையை யூட்டுவதாயிருந்தது.

* * *

இதுவரை இந்தக் கதை எனக்குக் கூறிக்கொண்டுவந்த கிராமத்து நண்பர், "என்ன சார், கதை எப்படி?" என்றார்.

"ஆமாம்; கதைதான்: உண்மையில் இப்படி நடந்திருக்குமா? அதுவும் அம்மன் சிலை செய்யப்போய் பெண்ணின் சிலையைச் செய்வானா? நம்ப முடியவில்லையே" என்றேன்.

"வாருங்கள், இன்னும் பிரதிஷ்டைக்கு நேரம் கிடக்கு" என்று என்னைக் கிராமத்திற்கு வெளியில் கூட்டிக்கொண்டு போனார். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றோம்.

ஆ! என்ன ஆச்சரியம்!! நான் கண்டது கனவா அல்லது நனவா? ஒரு பெண் சிலையின் இரு உடைந்த பாகங்கள். என் கண்களையே நம்ப முடியவில்லை. அந்தச் சிலையின் முகத்தில் வடிந்த தேஜஸை என்னால் என் வாழ்நாளில் மறக்க முடியாது.

கதையை நான் நம்பினேன்.

கனகபுரியின் மர்மம்

[ஸி. ஸத்யவதி, ஸெகண்டராபாத்]

நான் என் கிராமத்திலிருந்து பட்டணத்துக்கு ஒரு வேலையாகச் சென்று கொண்டிருந்தேன். கடும் வெயில். கத்திரி ஆரம்பம். என்னுடன் இரண்டு கூலிகள், சாமான்களை எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

என், கைக் கடியாரத்தில் மணி பன்னிரெண்டு ஆச்சுது. வெயிலின் தீக்ஷணத்தில் நடக்க முடியாதபடியால், இளைப்பாறும் பொருட்டு, நாலுபக்கமும் பார்த்ததில் வெகு தூரத்தில் ஓர் தோப்பு தென்பட்டது. தோப்பைச் சேர்ந்தாற்போல், ஓர் பாழடைந்த ஊரும் தென்பட்டது. அவ்விடம் சென்று ஓர் மர நிழலில் படுத்துக்கொண்டேன்.

திடீரென்று அழும் சப்தம் கேட்டது. அது ஒரு இளம் பெண்ணின் குரலாக தீனஸ்வரத்துடன் இருந்தது. இந்த வேளையில், யாருமில்லாத இந்த இடத்தில் அழுகைக்குரல் கேட்டதின் பேரில் ஆச்சரியத்துடன் அந்த திக்கை நோக்கிச் சென்றேன்.

சிறிது தூரம் சென்று, குட்டிச்சுவர்களையும் தாண்டிப்போனேன். அவ்விடத்தில் அரண்மனைபோல் பெரிய பாழடைந்த கட்டிடம் ஒன்று இருந்தது. குரலும் அந்த வீட்டிலிருந்துதான் வந்து கொண்டிருந்தது. நான் இந்த கட்டிடத்துக்குள் சென்றேன். அதில் அழுகைக் குரலைத் தவிர, மற்ற எவ்விதமான சப்தமும் இல்லாதபடியால், பயத்துடனே அறைகளைத் தாண்டி மாடிக்குச் சென்றேன். ஆஹா, என்ன ஆச்சரியம்! அது ஓர் இளம்பெண்ணின் குரல். வயது பதினெட்டு இருக்கும். மின்னல் கொடியைப்போல் இருக்கும். அந்தப் பெண்ணுக்கு என்ன கஷ்டம் நேரிட்டதோவென்று உள்ளே சென்று, அந்தப் பெண்ணைப் பார்த்து, "எதற்கு அழுகிறாய்?" என்று கேட்டேன். அதற்கவள் "என் கதையைக்கேட்க வேண்டுமா, யார் கேட்டாலும் என் கஷ்டத்தைத் தீர்க்க முடியுமா?" என்றாள். நான் கதையைக் கேட்ட பிறகு கஷ்டத்தைத் தீர்க்க ப்ரயத்தனம் செய்வதாகச் சொன்னேன். அவளும் ஒப்புக்கொண்டு ஆரம்பித்தாள்.

"என் தகப்பனார், நல்ல ஸ்திதியிலிருந்தார். என் கூடப் பிறந்தவர்கள் மூன்று அண்ணன்மார்கள். நான் ஒரே பெண்ணானதால், என்னை எவ்வளவோ செல்வமாக வளர்த்து வந்தார்கள். என் தகப்பனார் அடிக்கடி வியாதியால் பீடிக்கப்பட்டதின் பயனாக, அவர் கண்முன்னால், எனக்கு கல்யாணம் செய்ய வேண்டுமென்று ஆசையுடன் என் தாயாரின் வேண்டுகோளின் படி என், பத்தாவது வயதில் நல்லவரைப் பார்த்துத் திருமணம் செய்வித்தார்கள். கொஞ்ச நாளில் என் தகப்பனாரும் இந்த மண் பூமியின் வாழ்க்கையைவிட்டு விலகினார். நானும் என் மாமியார் வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்" என்று நிறுத்தினாள்.

"இவ்வளவுதானா உன் கதை" என்றேன்.

அதற்கு அந்தப் பெண் "இல்லை ஸ்வாமி இன்னும் இருக்கிறது. இனிமேல்தான் என் துக்க சம்பவங்கள்" என்று கண் கலங்கியவாறு கூறினாள். அவள் நிலை பார்ப்பதற்குப் பரிதாபமாகயிருந்தது.

"கேளுங்கள்" என்று ஆரம்பித்தாள். "நான் புக்ககம் போன புதிதில், என் மாமி, நாத்தி, இரண்டு பேரும் என்பேரில் எவ்வளவோ அன்பாக இருந்தார்கள். என் புருஷனும் என்மேல் வெகு அன்பாக இருந்தார். நான் நடந்தாலும் 'ஐயோ, நடக்காதே, கால் வலிக்கும்' என்பார்கள். நான் இந்த ஸ்திதியில், என் பிறந்த வீட்டையே மறந்துவிட்டேன், அவ்வளவு செல்வாக்குடன் வளர்ந்து வந்தேன்.

"என் புருஷன், எனக்கு அன்புடன் எவ்வளவோ, நல்ல, நீதி புஸ்தகங்கள் கொடுப்பார். நானும் வாசித்துக் கொடுத்து விடுவேன். அவருக்கு இதெல்லாம்

பார்த்து என் விஷயத்தில் வெகு திருப்தி. நானும் அவருக்கு, பய பக்தியுடன் வேண்டிய கடமைகளைத் தவறாமல்,செய்து வந்தேன்.

இதற்குமேல், என் பாபக் கிரகம் என்னைச் சுற்றிக்கொண்டது. முதல் முதல் என் மாமியும், நாத்தியும், என்னை, பாடக்கூடாதென்றும், வாசிக்கக்கூடாதென்றும், கண்டித்தார்கள். இதுமாதிரி கண்டிப்பே, அதிகரித்து, பிறகு என் பேரில், த்வேஷமாக மாறிவிட்டது."

இதற்குள் நான் குறுக்கு விசாரணையைப்போல், 'த்வேஷத்துக்குக் காரணமென்னவோ" என்றேன்.

"அதற்குக் காரணம் எனக்கே தெரியாதே, உங்களுக்கு என்னவென்று சொல்வது" என்று கதையைத் தொடங்கினாள்." "என் புருஷன் என்னோடு பேசினால் அவர்களிருவரும் "குசுகுசு"வென்று பேசிக்கொள்வார்கள். என் புருஷனோ பரம ஸாது, அவருக்கு ஒன்றுமே தெரியாது. தாயார், தமக்கை விஷயத்தில், அவர்கள் மனம் கோணாமல் நடப்பவர். என் மாமிக்கும், நாத்திக்கும், அவரிடமே சொல்லி, என்னோடு பேசவேண்டாமென்று சொல்லத் தைர்யமில்லை. ஆதலால் என்னை ஒரு நாள் கூப்பிட்டு, என் புருஷனோடு நான் பேசக் கூடாதென்று கண்டித்தார்கள். ஆனால் என் புருஷனே என்னோடு வார்த்தையாடும்பொழுது, நான் வெறுமனே இருப்பது, அவர் மனதுக்குக் கஷ்டத்தைக் கொடுக்குமென்று சில சமயங்களில் பதில் சொல்லாதிருந்தாலும், அநேகமாய் வார்த்தையாடிக்கொண்டுதா னிருந்தேன்.

திரும்பவும், நான் பேசுவதைப் பார்த்து என் நாத்தி "பேசவேண்டாமென்று சொன்னால் என் பேசுகிறாய்?" என்று கோபத்துடன் கேட்டாள். "அவர் ஏதாகிலும் கேட்கும்பொழுது பதில் சொல்லாமலிருப்பது அவர் மனசுக்கு, கஷ்டமாச்சே" என்று பதிலளித்தேன். அதற்கவள் "இன்னொரு தடவை உன்னுடன் பேச வந்தால் நீ பதிலுக்கு "உங்களைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை, உங்கள் மீது எனக்கு ஆசையுமில்லை" என்று சொல்லிவிடு" என்றாள். "ஐயோ இதை எப்படிச் சொல்வேன்" என்று வருத்தத்துடன் கேட்டேன். அதற்கு என் நாத்தி "நீ பயப்படாதே நீ அப்படிச் சொன்னால் தான் அவனுக்கு உன்மீது ஆசை அதிகமாகுமென்று" பதிலளித்தாள்.

"ஸ்வாமி என் அறியாத்தனத்தால் அதை நிஜமென்று நம்பினேன். அன்று சாயந்திரம் என் புருஷன் அன்போடு கூப்பிடும் பொழுது என் நாத்தி எனக்கு உபதேசம் செய்தவைகளை, அவரிடம் அவிழ்த்து விட்டேன். அவருக்கு என்மேல் சொல்ல முடியாத கோபம் வந்துவிட்டது. என் மாமியும் நாத்தியும், அவருடன் சேர்ந்து, என்னைப் பலவிதமாய் அவதூறுகளுக்கு ஆளாக்கி வீட்டைவிட்டு அடித்துத் துரத்தினார்கள். ஆனால், நான் எவ்வளவோ, மன்னிப்புக் கேட்டும் பயனில்லாமல்போச்சுது. கடைசியில், அவர்கள்வீட்டில், வேலைக்காரியாகவாவது இருக்கிறேனென்று சொல்லியும் கேட்கவில்லை. பிறகு என் புருஷன் என்னைப் பார்க்கவே யில்லை. நடந்தவைகளை அவரிடம் சொல்லி, மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று துடித்தேன். அதற்கு சந்தர்ப்பம் கொடாமல், என் நாத்தி அவருடன், சுற்றிக் கொண்டிருந்தாள். இதற்குள் என் மாமியார், என் நகை, புடவைகளை எடுத்துக் கொண்டு நானே, அவர்களை விட்டு, அவர்களுடன் இருக்கப் பிரியப் படாமல், நகை, புடவைகளை எடுத்துக் கொண்டு போய்விட்டதாக, எழுதி, என் கையெழுத்தையும் வாங்கிக் கொண்டு, என்னைத் துரத்திவிட்டார்"

"பிறகு என் தாயாரைத் தேடிக் கொண்டே வந்தேன். வழி தெரியாமல் இவ்வீட்டை யடைந்தேன்.

"ஸ்வாமி, இதுதான் என் கதையின் வரலாறு. இந்தக் கஷ்டத்தை யாரால் தீர்க்க முடியும்?" என்று கண்ணீர் ததும்பக் கூறி முடித்தாள்? எனக்கு அவள் கதையைக் கேட்டு வருத்த முண்டாயிற்று. எப்படியாவது, இவளைச் சீர்படுத்த வேண்டுமென்று "அம்மா உன் புருஷன் வசிக்கும் ஊர் எது? நான்

பார்த்து என்னால் ஆனவரையில், சிரமப்பட்டு அவரிடம் உன்னைச் சேர்க்கிறே”னென்று சொன்னேன்.

அவள், “ஸ்வாமி, என் புருஷன் வசிக்கும் ஊரா! என் பேரை எடுத்தாலே, உங்களைத் தூரத்திவிடுவார்களே. ஆனாலும் அவர் வசிக்கும் ஊர் ப——” என்று முடிப்பதற்குள் கூலிகள் “சாமி எழுந்திருங்கோ சாமி. நேரமாச்சு. பட்டணம்போக” என்று எழுப்பினார்கள். நான் நித்திராவஸ்தையிலிருந்து எழுந்து, “ஓகோ நன்றாய்த் தூங்கிவிட்டேன். மணியும் இரண்டாகப் போகிறதே” என்று சொல்லிக்கொண்டே அவர்களைப் பார்த்து, “டேய். இது என்ன ஊரடா, பாழடைந்து போயிருக்கே” என்றேன். “சாமி இது கனகபுரின்னு ஊரு சாமி. முன்னே நல்லா இருந்துடுச்சாம். க்ஷாமம் வந்திடுச்சே, அப்பொங்கோ, எல்லாரும் ஊரைவிட்டு பூட்டாங்கோ. அப்புறம் இந்த ஊர் பாழாய்ப் போச்சுங்கோ. இட்பெல்லாம், பிசாசிங்களும், பூதங்களும் தான் இருக்குதுங்கோ” என்று பதிலளித்தார்கள்.

ஆனால், நான் கனவில் கண்ட பெண்ணின் கதி என்ன வாச்சுதோ?

Notice.

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

O. P. No. 30/1940.

அவயாம்பாள் அம்மாள்—மனுதாரி

Nil —எதிர்மனுதார்

ஷை ரெ. மனுதாரி வக்கீல் M. K. நாராயணஸாமி அய்யர் தெரிவித்துக் கொள்ளுகிறதாவது:—

ஷை நம்பரில் மனுதாரியின் புருஷரான மன்னார்குடி தாலூக்கா எத்தக்குடியிலிருந்து 17-4-35ல் இறந்துபோன R. விசுவநாதய்யருக்கு வரவேண்டியதாய் 27-6-1931ல் கிள்ளுகுடி தங்கவேலு படையாச்சியால் ரூ. 100 க்கு யெழுதிக்கொடுத்திருக்கிற புரோ நோட்டுப்படி வரவேண்டியதாகயிருக்கும் துகை ரூ. 115-12-0 யும் ஷை விசுவநாதய்யரால் நாகப்பட்டணம் தாலூக்கா தேவூர் Post-Office Savings Bankயில் deposit செய்யப்பட்டிருக்கும் ரூ. 41-0-6க்கு வட்டி முதல் துகை சுமார் ரூ. 45 யும் மனுதாரி வசூல் செய்து அடையும் விஷயமாய் மனுதாரிக்கு வார்சு சர்ட்டிபிகேட்டு கொடுக்கவேணுமாய் மனுதாரியால் மனுக்கொடுத்த Noticeக்கு ஆர்டராகி 19-6-1940ல் ஈராங்கி போடப்பட்டிருக்கிறபடியால், ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் கோர்ட்டில் ஆஜராகித் தெரிவித்துக் கொள்ளலாம்.

(Sd) M. K. Narayanaswami Iyer,
B.A., B.L.
மனுதாரி வக்கீல்.

மன்னார்குடி,
9-5-'40.

BOOKS FOR ALL

	Rs.	A.
1. The Message of the Gita Edited by Anilbaran Roy.	5	0
2. Songs from the Soul By Anilbaran Roy	1	4
Works of Sri Aurobindo		
3, Essays on the Gita 1st Series	6	0
4. " " 2nd Series	7	8
5. A System of National Education	1	0
6, The Ideal of the Karmayogin	1	4
7. The Renaissance in India	1	8
8, The Life Divine (Just published Vol. I)	6	0
Books of Swami Sivananda		
9. The practice of Yoga (Edn. II in print)	0	8
10. Yogic and Vedantic Sadhan	0	8
11. A Trip to Kailas	0	12
12. Hinduism today by Prof. D. S. Sarma	1	8
13. Vedanta or the Science of Reality by K. A. Krishnaswami Iyer, B.A.	10	0
14. Who is Krishna? by K. L. Saha, M.A.	1	0
15. Krishna and the World Quest by N. R. Shenai	0	12

Svetaranya Asrama Book Shop,

295, Lingha Chetty St., G. T. Madras.

'உள்ளதும் போச்சே நொள்ளைக்கண்ணு'

"மலர்"

தஞ்சாவூரின் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் கண்ணன் என்று ஓர் உழவன் இறந்தான். அவனுடைய ஊரார் அவனை 'நொள்ளைக்கண்ணு' என்று அழைத்து வந்தார்கள்.

ஒருநாள் கடன்காரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு தொந்திரவு செய்தார்கள். அவனிடம் பணமில்லை. தன் நிலத்தை விற்று கொஞ்சம் கடன்தான் அடைக்க முடிந்தது. கடன்காரர்களின் தொந்திரவினாலும், உணவின்மையாலும் மிகவும் வருத்த முற்றான். அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அன்று இரவு அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அதன்படி, அவன் தனக்கு முக்கியமாக வேண்டியிருந்தவற்றை மட்டும் சிறு மூட்டையாகக் கட்டிக் கொண்டு தேச யாத்திரை செய்ய ஒரு நிசியில் கிளம்பி விட்டான்.

ஒவ்வொரு ஊராகச் சென்று இரண்டு மூன்று நாட்கள் தங்கி ஏதாகிலும் வேலை கிடைத்தால் வேலை செய்து சாப்பிடுவான். இல்லையேல், பிச்சை எடுத்துச் சாப்பிட்டு வந்தான்.

இப்படியாக ஒவ்வொரு ஊராகச் சென்று வட இந்தியாவில் அல்லகாபாத் என்ற பட்டணத்திற்குச் சென்றான். அங்கு மக்களின் தாய்மொழி ஹிந்துஸ்தானி யாகும். கண்ணனுக்கு. அவர்கள் பேசுவது ஒன்றும் புரியவில்லை. தமிழர்கள் யாராகிலும் இருக்கிறார்களா என்று ஒவ்வொரு தெருவாகத் தேடி அலைந்தான். முடிவில், கொல்லத்துக்காரர்கள் வீடுகட்டுவதை மேற்பார்வை செய்து கொண்டு ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் ஓர் தமிழர். அவரைக் கண்ணன் எங்கேயோ பார்த்திருந்தான். அவருக்கும் அவனை எங்கேயோ பார்த்திருந்தாற் போலிருந்தது. ஆனால் அவர்களுக்கு எங்கே, எப்பொழுது பார்த்துக்கொண்டார்கள் என்ற ஞாபகம் வரவில்லை. இருவரும் ஒருவரையொருவர் இரண்டு நிமிடங்கள் உற்று நோக்கினார்கள். அவர் "நீ கண்ணனல்லவா?" என்று கேட்டார். "ஆமா சாமி, நீங்க மிராசுதார் மகனில்லங்க?' என்று கண்ணன் கேட்டான்.

"ஆமாம் அதிருக்கட்டும். நீ இங்கே எப்படி வந்தே?" என்று கேட்டார்.

"கடன் அதிகமாய்ப் போச்சு சாமி. கடன்காரர் தொந்திரவு பொருக்க முடியவில்லை. அதனாலே ஓடிவந்துட்டேன் சாமி. ஏதாகிலும் வேலையிருந்தா தாங்க சாமி. இவங்க பாஷை தெரியல்லே, ஒண்ணும் தெரியல்லே" என்று மனமுருகும்படி சொன்னான்.

அவர் ஒரு செளகாரிடம் தலைமை குமாஸ்தா. அச்செளகார் ஒரு வீடு கட்டிக் கொண்டிருந்தார். அங்கு வேலை செய்யும் வேலையாட்களை மேற்பாவை பார்ப்பதற்கும், வேலை வாங்குவதற்கும் அவரை நியமித்திருந்தார். இவர் கண்ணனுக்கு ஒரு நாளுக்கு நாலணு வீதம் கூலி போட்டுத் தருவதாய்ச் சொன்னர். அதற்குச் சம்மதித்து வேலை செய்ய ஒத்துக் கொண்டான்.

மூன்ருவது நாள் கூலி கொடுக்கும் நாள். அந்தத் தமிழர் ஒரு சிறு காகிதத் துண்டில் ஒவ்வொரு வேலைக்காரனும் பெற்றுக் கொள்ள வேண்டியகூலித் தொகையை எழுத்தில் கையொப்பமிட்டுத் தருவார். அந்த காகிதத் துண்டை கொண்டு போய் செளகாரிடம் கொடுத்தால், அவர் பணத்தைக் கொடுத்து விடுவார்.

எல்லோருக்கும் தருவதுபோல, அத் தமிழர் கண்ணனுக்கு ஒரு சிறு காகிதத்தில் (111) இக் குறிப்பை எழுதிக் கொடுத்துவிட்டு "இதைக் கொண்டுபோய்க் கொடு. உன்னுடையமூன்று நாள் கூலி பன்னிரண்டு அணு கிடைக்கும். வாங்கிக் கொள்" என்று சொல்லி அனுப்பினர்.

"இக் காகிதத்திலுள்ள இம் மூன்று கோடுகளுக்கு மூன்று கால் ரூபாய்கள்—முக்கால் ரூபாய்—கிடைக்கப் போகிறது. ஒரே ஒரு கோடு அதிகமாக இருந்தால் நான்கு கால் ரூபாய்கள்—ஒரு ரூபாய்—கிடைக்குமல்லவா? ஒரு சிறு கோடு போடுவது மிக சிரமமான காரியமா? ஒரு கோடு போட்டால் யாருக்கு நான் போட்டேன் என்று தெரியப் போகிறது?" என்று பலவாறு நினைத்துவிட்டு ஒரு மறைவான இடத்திற்குப் போய், அந்த மூன்று நேர் கோடுகளுக்கு முன்னுல் அவை போலவே ஒரு நேர் கோடு போட்டான். இப்பொழுது அவனுக்கு ஒரு ரூபாய் கிடைக்கப் போகிறது என்ற சந்தோஷம் சொல்லி முடியாது.

செளகாரிடம் கொண்டுபோய் கொடுத்தான். அதில் அவர் நான்கு கோடுகள் இருப்பது கண்டு "குமாஸ்தா தப்பிதமாக எழுதி இருக்கிருர். அதைத் திருத்திக் கொண்டுவா." என்று சொல்லி அனுப்பிவிட்டார். ஏனெனில், ஒரு ரூபாய் என்ருல் (?) என்ற சமஸ்கிருத இலக்கம் போடவும் இவ்விதம் எழுதுவார்கள். ஒரு ரூபாய்க்கு குறைந்த முக்கால் ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் என்ருல், முறையே, (111), (11), (1) இவ்வாறு எழுதுவார்கள். நாலு நேர்கோடு போட்ட ரசீதைக் கண்டு செளகார் குமாஸ்தா தப்பு செய்திருக்கிருர் என்று எண்ணினர். அவருக்கு எப்படி, இது கண்ணணின் பேராசைச் செய்கை என்று தெரியும்?

கண்ணனின் மனக்கோட்டையெல்லாம் முறிந்தன. குமாஸ்தா, தமிழரிடம் கொண்டுபோனுல் எங்கு தன் திருட்டுத்தனம் தெரிந்துவிடப் போகிறதோ வென்ற பயம். அதனுல் அவன் அவரிடம் போகவில்லை. கவலை பட்டுக்கொண்டே நடந்து போகையில் கண்ணன் மனம் அடிக்கடி "உள்ளதும் போச்சே நொள்ளைக் கண்ணு" என்று சொல்லி அவனைக் கேலிச் செய்தது.

(ஹிந்தி கதையைத் தழுவி எழுதியது.)

ஸன்லைட்

உங்கள் குடும்பத்திற்கு
சந்தோஷம், மளிக்கட்டும்



புத்திசாலித்தனமுள்ள எல்லா குடும்பங்களிலும் ஸன்லைட் சோப் உபயோகித்துவருகிறார்கள். ஸன்லைட் சோப் உழைக்கும் நேரத்தை குறைத்து ஓய்வுகொடுக்கும்நேரத்தை அதிகமாக்குகிறது. ஸன்லைட் ஸோப் குடும்பத்தை சுத்தமாகவும் ஆரோக்யமாகவும் சந்தோஷமாயும் செய்கிறது.

உண்மையான ஸன்லைட் இம்மாதிரி பெட்டிகள் ஒன்றில்தான் விற்கப் பட்டு வருகிறது.

LEVER BROTHERS (INDIA) LTD. s. 19-50 TM

ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் (2)

[கா. சி. வேங்கடரமணி]

பாடம் 6

கீரி	பாம்பு
புலி	ஆடு
நாய்	பூனை
பூனை	எலி
நரி	கோழி

குழந்தை, மணி, இந்த வாரம் சேர்த்திருக்கும் ஜோடியின் விசேஷங்களைச் சொல்.

அவைகள் ஒன்றுக்கொன்று பகை.

மணி, கீரியும் பாம்பும், வேலியோரத்தில் சண்டை இடுவதை நீ எப்பொழுதாவது பார்த்திருக்கிறாயா ?

மேற்கண்ட ஜந்துக்கள் தங்கள் வைரிகளை வேட்டையாடுவதை நீ பார்த்திருக்கிறாயா? ஒரு ஜோடிக்கும் மற்றொன்றுக்கும் விரோதவழியில் இருக்கும் வேற்றுமைகளை யோசித்துச் சொல்லு.

மேற்கண்ட ஜந்துக்களில் எதைக் கண்டால் நாம் மிகவும் பயப்படுகிறோம் ?

இந்தவாரம் பகை ஜாதிகளைச் சேர்த்துவிட்டோம். அடுத்த வாரம் நேச ஜாதிகளைச் சேர்த்து எழுதிக் கொண்டுவா.

புத்தக விமர்சனம்

இளைஞன் கனவு: ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் இயற்றியது. வங்காளி மூலத்திலிருந்து ஸ்ரீ. த. நா. குமாரஸ்வாமி, பி.ஏ., அவர்கள் மொழிபெயர்த்தது. பதிப்பித்தவர், அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 1-4-0.

தொடர்ந்தாற்போல் இரண்டு வருஷங்கள் ராஷ்ட்ரபதியாகக் கௌரவிக்கப் பெற்ற ஸ்ரீ. சுபாஷ் பாபு இளமைப் பருவத்திலே கொண்ட தீவிரமான கொள்கைகளையும் அவர் கண்ட பகற்கனவுகளையும் அவற்றை நனவுகளாக்க முயன்றதைப் பற்றியும் இந்திய மக்கள் அனைவரும் அறிந்து போற்ற வேண்டுவது அவசியம். அவ்வாறு அறிந்து பாராட்டுவதற்குப் பெரிதும் உதவுவது இம்மொழி பெயர்ப்பு நூல். யௌவன தசையில் அவர் செய்த உபந்யாஸங்கள், சிறையினின்றும் நண்பர்களுக்கு எழுதிய கட்டுரைகள், கடிதங்கள் இவைகளிலே, தேசபந்துதாஸ் அவர்களிடம் இவருக்கு இருந்த குரு பக்தியையும், வங்காள நாட்டின் பெருமையை வளர்த்தற்கும் சுயாட்சியை இந்தியா பெறுவதற்கும் இவர் தம் உடல் பொருள் ஆவி எல்லாம் தியாகஞ் செய்யத் துணிந்த துணிவையும், தாம் செய்த தெல்லாம் போதாது என்று இவர் கொண்ட அதிருப்தியால் விளங்கும் இவரது அபரிமிதமான தேசபக்தியையும் விளக்குகின்றன. எனவே, ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பெருமையை உண்மையாக உய்த்துணர்வதற்கு இந்நூல் சிறந்த கருவி ஆகின்றது. தமிழ் நடை மூலத்தின் கௌரவ நடையையும் ஆழ்ந்த கருத்துக்களை விளக்கும் திறனையும் கண்ணாடி போல் பிரதி பிம்பித்துக் காட்டுதல் பெரிதும் போற்றத்தக்கது.

பாலர் விருந்து: ஆசிரியர் என். எஸ். அருணாசல ஐயர், விலை அணா 4. சிறுவர்களுக்கான பல அரிய கவிதைகள் அடங்கியது. ஒவ்வொரு சிறுவர் சிறுமிகள் அவசியம் வாங்கிப் படிக்கத் தகுந்தது.

Memoirs: ஆசிரியர்கள் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் பி. ஏ. பி. எல்; கே. ஸ்வாமிநாதன் எம். ஏ. பி. எல்; அலெக்ஸாண்டர் ஞானமுத்து எம். ஏ. சென்னை புத்தகாலய சங்கத்தார் பிரசுரம்.

சென்னை புத்தகாலய சங்கத்தார் செய்து வரும் பிரசாரத்துக்கு உதவியாயிருக்க இப்பிரசுரம் வெளியிடப்பட்டது. இதில் இந்தியாவிலுள்ள புத்தகாலயங்களின் நிலைமை பற்றியும், அவற்றைச் சீர்திருத்த வேண்டிய முறைகளைப் பற்றியும், இத்துறையில் மிகுந்த அநுபவமுள்ள ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸ்ரீமான் எஸ். ஆர். ரங்கநாதன், ஸ்ரீமான் கே. ஸ்வாமிநாதன் முதலியோர் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரைகள் எழுதி இருக்கிறார்கள். "பத்திரிகைகளைப்பற்றியும் அவற்றின் அபிவிருத்தியைப்பற்றியும் பாடுபட இச்சங்கம் தீர்மானித்திருக்கிறது" என்று சங்கத்தின் இலக்ஷியங்களைக் குறிக்கும் போது ஸ்ரீகே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் கூறுகிறார். இச்சங்கத்திற்கு உதவியாக இருக்குமென்று ஆரம்பித்து வெளியிடப்பட்ட இப்பிரசுரமும், இன்னும் இது போன்று வெளியிடப்படும் பிரசுரங்களும் தேசத்தின் முற்போக்குக்குப் பாடுபடும் ஓர் சிறந்த சாதனங்களாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

Harijan uplift in Mysore: மைசூர் சமஸ்தான சர்க்கார் பிரசார உத்தியோகஸ்தரால் வெளியிடப்பட்டது.

ஹரிஜன சேவையில் திவான் ஸர் மிர்ஸா இஸ்மெயில், மிகுந்த ஊக்கத்துடன் ஈடுபடுகிறார் என்பது இப்பிரசுரத்தைப் படித்தால் விளங்கும். கீழ்ப்பட்ட ஜாதியார்களான மைசூர் ஆதி கர்னாடகர்களுக்கு சர்க்கார் பல விதங்களிலும் ஆதரவு அளித்து வருகிறது என்

பது இதைப் படித்தவர்களுக்குத் தெளிவாக விளங்கும். ஹரி ஜனங்களுக்கென்றே பாடுபட ஓர் இழிவான ஜாதியார் கமிட்டி ஒன்று இருக்கிறது. இதில் பல பிரபலஸ்தர்களும் அங்கத்தினர்களாகி ஏழை மக்களுக்குச் சேவை செய்து வருவதை இதில் விவரமாகக் குறித்திருக்கிறார்கள்.

Village uplift in Mysore: மைசூர் சமஸ்தான சர்க்கார் பிரசார உத்தியோகஸ்தாரால் வெளியிடப்பட்டது. விலை அணு 4.

கிராம முன்னேற்றத்திற்காக சமஸ்தான சர்க்கார் கையாண்டுவரும் முறைகளைப்பற்றியும் கிராமக் கைத்தொழிலின் அபிவிருத்தியைப்பற்றியும் இதில் பல அரிய விஷயங்கள் இருக்கின்றன. அழகிய போட்டோப் படங்களுடன் கூடி இருக்கிறது. மைசூர் கிராமவாசிகளைப்பற்றி தெரிந்துகொள்ள விரும்புவோர், இப்புத்தகத்தை அவசியம் வாங்கிப் படிக்க வேண்டும்.

Mysore and Modern Industries: மைசூர் சமஸ்தான சர்க்கார் பிரசார உத்தியோகஸ்தாரால் வெளியிடப்பட்டது.

1938 ஆகஸ்டு 5உ மைசூர் திவான் ஸர் மிர்ஸா இஸ்மெயில் மைசூர் ரேடியோவில் பேசியபோது "எங்கள் தொழிற்சாலைகளைப்பற்றி நாங்கள் மிகுந்த திருப்தியடைகிறோம். ஒவ்வொரு உண்மை மைசூராரையும் அவர், மைசூர் ஸோப்பினல் தேகத்தைச் சுத்தம் செய்துகொள்ள வேண்டும், மைசூர் 'டவல்'களால் உடம்பைத் துடைத்துக்கொள்ள வேண்டும், மைசூர் ஸில்க் ஆடைகளை அணிய வேண்டும், மைசூர் குதிரைகளின் மீது சவாரி செய்ய வேண்டும், மைசூர் ஆகாரத்தைச் சம்பிரமமாகச் சாப்பிட வேண்டும், மைசூர் காப்பியை மைசூர் சர்க்கரையுடன் குடிக்க வேண்டும், மைசூர் சிமிட்டியைக் கொண்டு வீடுகளைக் கட்டிக்கொள்ள வேண்டும், மைசூர் மரச் சாமான்களால் வீடுகளை அலங்கரிக்க வேண்டும், மைசூர் காகிதத்தால் கடிதங்களை எழுத வேண்டும், என்ற திட்டமுள்ளவர்களாகச் செய்யவேண்டும்" என்று கூறினர். அதற்கு அத்தாக்ஷியாக இப்பிரசுரம் இருக்கிறது. மைசூரின் தொழில் எந்தெந்த முறைகளால் எப்படி எப்படிக் கையாண்டு அபிவிருத்தி யடைந்தது என்பது போன்ற விவரங்களை இதில் காணலாம். விலையுயர்ந்த ஆர்ட்டு காகிதத்தில் தொழிற்சாலை, இயந்திரம், முதலியவற்றின் படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ அரவிந்தயோகி: ஆசிரியர் கு. ப. ராஜகோபாலன். அல்லயன்ஸ் கம்பெனி வெளியீடு. விலை அணு 12.

சிறு கதை எழுதுவதிலும் கற்பனு சக்தியிலும் புகழ் பெற்ற ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் ஜீவிய சரித்திரம் எழுதுவதிலும் குறிப்பிடத் தக்க வெற்றி பெற்றிருப்பது அவருடைய எழுத்துத் திறமையையே காட்டுகிறது.

அரவிந்தரின் ஜீவிய சரித்திரத்தை எழுத ஒருவர் கவியாகத்தான் இருக்க வேண்டும் என்று ஸ்ரீ அமுதன் முன்னுரையில் கூறி இருக்கிறார். அவ்வித கவித்வத்தினல்தான் ஸ்ரீ ராஜகோபாலன் வெற்றிகரமாக வாசகர்களை வசிகரிக்கும் நடையில் எழுதியுள்ளார். நடை மிகவும் எளியதாகவும் அழகாகவும் இருக்கிறது.

ஆசிரியரின் உத்தரபாரா பிரசங்கம் மொழி பெயர்ப்பு ஓர் விசேஷ சக்தியுடன் கூடி இருக்கிறது. படிப்போர்க்கு நேர் எதிரில் அரவிந்தர் நின்று பிரஸங்கம் செய்வதுபோல் இருக்கிறது. இது ஸ்ரீ ராஜகோபாலனின் மொழி பெயர்ப்புத் திறனையே காட்டுகிறது. புத்தகத்தின் "கெட் அப்" கவர்ச்சியுடன் கூடி இருக்கிறது. பகவான் அரவிந்தரைப் பற்றித் தெரிந்துகொள்ள ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய புத்தகம் இது.